**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.481/2026**
**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : ஜெரால்ட் | **Caste** | : |
| **Father's Name** | : அமல்ராஜ் | **Calling** | : அரசு ஊழியர் |
| **Village** | : நெட்டு தெரு | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 54 |
| | | **Dated** | : **10.08.2026** |

**10.08.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு.ஜெரால்ட்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.1** ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1வது எதிரி ஆஜர். 2வது எதிரி ஆஜர் இல்லை . U/s.355 of petition filed and allowed.**

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>**

நான் தற்போது திண்டுக்கல் நெட்டு தெருவில் குடியிருந்து, அரசு காப்பீட்டு நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். எதிரிகளை மகேந்திரம் என்பவர் மூலம் எனக்கு பழக்கம். 28.02.2021ம் தேதி 1ம் எதிரி பரத்து என்பவருக்கு ரூ.850/- Online மூலமாக எனது இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்வதர்காக அனுப்பி வைத்தேன். பின்னிட்டு நான் அனுப்பிய வங்கி கணக்கானது பரத்தின் வங்கி கணக்கில் இல்லை என தெரியவந்தது. அது தினேஷ் என்பவரின் State Bank வங்கி கணக்கு என தெரியவந்தது. நான் பலமுறை அவரிடம் காப்பீடு செய்துவிட்டீர்களா என்று கேட்டுவந்தபோது அவர் காலகடத்தி வந்தார்.

மேலும் மிரட்டும் தோரனையில் பேசிவந்தார். நான் பணம் செலுத்திய வங்கி கணக்கான தினேஷ் என்வரிடம் கேட்டேன். ரூ.850/- க்கு காப்பீடு செய்ய முடியாது என்றும், அதனால் பரத்திடம் பணத்தை கொடுத்துவிட்டேன் என சொன்னார். அதுதொடர்பாக பரத்திடம் கேட்டபோது பணத்தை வாங்கிவிட்டதாகவும், திருப்பி தரமுடியாது என்ன செய்வாய் என திட்டினார். இதற்கிடையில் எனது தொலைபேசிக்கு பரத்தினன் நண்பர்கள் பலமுறை போன் செய்த அசிங்கமான வார்த்தைகளால் பேசி திட்டினார்கள். 08.03.2023ம் தேதி மதியம் 1.30 மணியளவில் எனக்கு பரத் போன் மூலம் தொடர்பு கொண்டு பஸ்ஸ்டான்டில் இருப்பதாகவும், பஸ்ஸ்டான்டுக்கு வந்து பணத்தை பெற்றுக்கொள்ளுமாறும் சொன்னார். நான் பஸ்ஸ்டான் அருகில் உள்ள நூல்நிலையம் எதிரே சென்றேன். அங்கு பரத் இருந்தார். என்னை பார்த்ததும் நீங்கள் தான் ஜெரால்டா என கேட்டார். நான் ஆமாம் என சொன்னவுடன் கைகளால் வலது கண்ணத்தில் அடித்தார். நான் காவல் நிலையம் செல்வதர்காக அருகில் இருந்த ஆட்டோவில் எறினேன். பரத் ஆட்டோவை மறித்து என்னை வெளியே வாடா என சொல்லி வெளியே இழுத்தார். பரத் கையில் அணிந்திருந்த காப்பினால் எனது மூக்கில் அடித்து இரத்த காயத்தை ஏற்படுத்தினார். எனக்கு மூக்கில் எலும்பு முறிவு ஏற்பட்டது. பரத்துடன் இருந்த மற்றொரு எதிரி மதன் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி கொலை மிரட்டல் விடுத்தார். அருகில் இருந்த எனது நண்பன் மற்றும் ஆட்டோ டிவைர் என்னை சிகிச்சைகாக திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள். மேல் சிகிச்சைக்காக திண்டுக்கல் சிட்டி மருத்துவமனையில் மறுநாள் சேர்ந்தேன். மேலும் காவல் நிலையத்தில் புகார் அளித்தும் நடவடிக்கை இல்லை. உயர் அதிகாரிகளுக்கு புகார் செய்தேன். அதன்பின்பு 16.07.2021ம் தேதி புகாரை பெற்று வழக்கு பதிவு செய்து என்னை விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இன்று நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ள நபர் 1ம் எதிரி பரத் ஆவார். மற்றொரு எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் இல்லை. 2ம் எதிரியை பார்த்தால் அடையாளம் தெரியும்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் என்ன வேலை பார்க்கிறேன் என்றால், United India Insurance companyல் பணிபுரிகிறேன். Insurance–ஐ பற்றி அனைத்து விசயங்களும் எனக்கு தெரியும் என்றால், தெரியும். ஆஜர் எதிரியை எப்படி எனக்கு தெரியும் என்றால், நேரடியாக தெரியாது மகேந்திரம் மூலமாக தெரியும். மகேந்திரனை எப்படி தெரியும் என்றால்,

அரசியல் மூலமாக தெரியும். நான் ரூ.850/-ஐ பரத்தின் கணக்கிற்கு Insurance-காக இணையதளம் மூலமாக போட்டேன் என்று புகாரில் குறிப்பிட்டுள்ளேன் என்றால், சரிதான், ஆனால் பரத் சொன்ன நம்பருக்கு தான் நான் போட்டேன். என்ன Insurance-காக பணம் அனுப்பியுள்ளேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல, வண்டிக்காக என்று குறிப்பிட்டுள்ளேன். நான் ரூ.850/- பரத் சொன்ன கணக்கிற்கு செலுத்தினேன் என்பதற்கு எந்த ஆவணமும் போலீசார் விசாரணையில் கொடுக்கவில்லை என்றால், சரிதான். பரத் சொன்ன கணக்கிற்கு போட்டேன் என்று போலீசார் விசாரணையிலோ, புகாரிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால், போலீசார் விசாரணையில் மட்டும் சொன்னேன்.

சம்பவம் எப்போது, எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால், 08.03.2021ம் தேதி, 01.45 - 02.00 மணியளவில் நடைபெற்றது. எனது புகாரி எத்தனை மணி என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான், போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். நாம் சம்பவம் நடந்த அன்று தான் எதிரியை பாத்தேன் என்றால், சரிதான். யார் பரத், யார் மதன் என்று எனக்கு தெரியாது என்றால், சரிதான். எந்த நண்பரின் இருந்து எனக்கு அன்றைய தினம் போன் வந்தது என்று போலீசார் விசாரணையிலோ, புகாரிலோ, வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லவிலை என்றால், சரிதான். சம்பவம் நடந்த பின்பு நான் எத்தனை மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் அளித்தேன் என்றால், நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் காவலர் ஒருவர் வந்து என்னை விசாரித்தார். எத்தனை நாட்கள் சிகிச்சையில் இருந்ததேன் என்றால், 1 நாள் GHல் இருந்தேன், பின்பு சிட்டி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன்.

**(சாட்சி இரத்தம் படிந்த கைக்குட்டை மற்றும் சட்டை, பணபரிமாற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் காட்டியதால் அரசு தரப்பில் குறியீடு செய்வதற்காக கால அவகாசத்துடம் ஒத்திவைக்கப்படுகிறது)**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.08.10 12:21:11 +0530

Judicial Magistrate No.II
Dindigul.